DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.STC 1438/2022

Prosecution witness – PW.1

| | | |
|---|---|---|
| Name | :திருமதி.பெத்தம்மாள் | Caste: |
| Husband's Name | : முத்து | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

11.07.2025 – 03.25 PM

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி கு.வி.மு.ச பிரிவு 311–ன் கீழ் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. நான் நீதிமன்றத்தில் முதல் விசாரணை சாட்சியத்தில் கூறிய சங்கதிகளைத்தான் போலீசார் விசாரணையின் போதும் புகாரிலும், கூறியுள்ளேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் மனு எழுதி கொடுத்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியாது என்பதால் எனது தங்கை பாலின் ராணி என்பவர் மூலமாக புகார் எழுதி வாங்கிக் கொண்டேன்.

2. நான் எனது தகப்பனார் வீடு அமைந்துள்ள ராணிசேதுபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அந்த வீட்டிற்குண்டான பட்டா எனது அப்பாவின் பெயரில் உள்ளது. அந்த வீடு எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டது. வழக்கு சொத்தானது எனது தகப்பனாரின் தகப்பனாரான எனது தாத்தா அடைக்கலம் என்பவருக்கு பாத்தியப்பட்டது. அதன் சர்வே எண் எனக்கு தெரியாது. நான் படிக்காதவள்.

3. சம்பவம் நடைபெற்றதற்கு பின்னதாக 2 மணி நேரம் கழித்து மாலை 05.00 மணியளவில் போலீசார் என்னை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தபோது மாரிச்சாமியும் முத்துக்கருப்பனும் இருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தபோது சொத்தானது எனது தாத்தாவின் பெயரில் உள்ளது என்ற விபரத்தைக் கூறி பட்டாவையும் காண்பித்தேன்.

4. புகார் மனுவில் முத்துமுருகன் என்பவர் பிரச்சனைக்குரிய வீட்டை கிரையம் பெற்றதாக அவர் கூறி தெரிந்து கொண்டதாக கூறியுள்ள நிலையில் சம்பவத்திற்கு முன்பு எப்போது அவர் கூறினார் என்றால் 1 மாதத்திற்கு முன்பு கூறினார். மேற்படி முத்துமுருகன் என்னிடம் கூறிய சங்கதிகளை என்னுடைய தங்கை பாலின்ராணி, மாரிச்சாமி ஆகியோர்களிடம் சொன்னேன். இது சம்மந்தமாக அவர்கள் வில்லங்க சான்று எடுத்து பார்த்தார்களா என்றால் அலுவலகம் சென்று பார்த்தார்கள். தபால் மூலமாக எனக்கும் ஒரு ஆவணம் வந்தது. ஆனால் அதை நான் படித்துப் பார்க்கவில்லை. எனக்கு படிக்க தெரியாது.

5. எனது தங்கை இணையதளத்தில் பார்த்தபோது பிரச்சனைக்குரிய இடத்தை முத்துமுருகன் என்பவர் தெய்வச்சீலை என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதாக இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. தற்போது இடத்திற்குரிய பட்டா முத்துமுருகன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டாவை இரத்து செய்ய எனது வழக்கறிஞர் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ள கூறியிருக்கிறோம்.

6. புகாரில் நான் வேலைக்கு சென்றுவிட்டதாக கூறியுள்ள நிலையில் எந்த வேலைக்கு சென்றுவிட்டேன் என்றால் ஊருக்கு தெற்கு புறம் உள்ள காட்டில் விவசாய கூலி வேலை செய்ய சென்றுவிட்டேன். நான் வீட்டிற்கு வந்தபோது என்னை தவிர சம்பவ இடத்தில் யாரும் இல்லை. நான் முதல் விசாரணை சாட்சியத்தில் எங்கள் ஊரைச் சேர்ந்த வயதான பெண்மணி அழுததாக கூறியுள்ள நிலையில் அவரின் பெயர் என்னவென்றால் செவனியம்மாள். இந்த விபரத்தையும் போலீசார் விசாரித்தபோது கூறியுள்ளேன்.

7. நான் மாலை 06.00 மணிக்கு எனது தங்கைக்கு போன் செய்து சம்பவம் குறித்து கூறினேன். வேறு யாருக்கும் நான் தகவல் சொல்லவில்லை. ஆனால் ஊரிலுள்ள 10, 20 ஆண்கள் வந்துவிட்டார்கள். அப்போது இரவு 07.00 மணி இருக்கும். வீட்டில் என்னென்ன பொருட்கள் இருந்தது என்றால் தட்டுமுட்டு சாமான்கள் இருந்தன. மேலும் நான் எனது கழுத்தில் 7 சவரன் கோதுமை மாடல்

செயினை அணிந்திருந்தேன். அந்த செயினை குளிக்கும் போது குளியலறையில் உள்ள ஆணியில் மாட்டியிருந்தேன். ஆனால் அதை எடுக்காமல் வேலைக்கு சென்றுவிட்டேன். வீட்டிற்கு வந்தபோது அந்த செயினோடு இடிந்து நொறுங்கி இருந்தது.

8. அந்த வீட்டிற்கு மின் இணைப்பு இல்லை என்றால் சரிதான். எனக்கு காயம் ஏற்பட்டதாக கூறியுள்ள நிலையில் நான் சிகிச்சை பெற்றேனா என்றால் நான் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். இந்த விபரத்தையும் போலீசாரிடம் கூறியுள்ளேன். எங்கள் ஊரிலிருந்து கமுதி, பெருநாழி, சாயல்குடி ஆகிய இடங்கள் அருகாமையில் இருக்கும் போது முதுகுளத்தூர் சென்றேன் என்றால் எனது அம்மா சிக்கல் பள்ளியில் தலைமை ஆசிரியையாக பணிபுரிந்து வந்தார். அதனால் எனது அம்மா பழக்கப்பட்ட ஊரான முதுகுளத்தூருக்கு தான் எப்போதும் வருவேன். சிக்கல் வேறு திசையில் உள்ளது என்றாலும், முதுகுளத்தூர் வேறு திசையில் உள்ளது என்றாலும் சரிதான். நான் வாடிக்கையாக முதுகுளத்தூருக்கு வருவேன். அவ்வாறு தான் அன்றைய தினமும் சென்றேன்.

9. காயத்திற்காக மருத்துவமனைக்கு செல்லவில்லை. எனக்கு சர்க்கரை நோய் உள்ளது அதற்கும், மூச்சுத் திணறலுக்கும் சிகிச்சைக்கு சென்றேன். எனக்கு இளைப்பு நோய் உள்ளது. எனது தங்கை பாலின்ராணி விழுப்புரத்தில் குடியிருந்து வருகிறார். சம்பவ இடத்திலிருந்து பெருநாழி காவல் நிலையத்திற்கு ஆட்டோவில் சென்றால் 10 நிமிடத்திற்குள் சென்று விடலாம். சம்பவம் நடந்த அன்றே காவல் நிலையம் சென்று புகார் அளிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் என்னால் முடியவில்லை. எனது தம்பியும் அந்த அளவு முயற்சி எடுக்கவில்லை.

10. சம்பவ இடத்திற்கு தெற்கே காலனிக்கு செல்லும் பாதை உள்ளது என்றால் சரிதான். அந்த ரோட்டிற்கு தெற்கே எனது தம்பி மாரிச்சாமியின் வீடு உள்ளது என்றால் சரிதான். அதற்கு பின்பு முத்துலெட்சுமியின் இடம் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு மேற்கே தரிசு நிலம் உள்ளது. அது

யாருடையது என்று எனக்கு தெரியாது. கிழக்கே வழிவிட்டான் தேவர் என்பவரது இடம் உள்ளது. எனது வீட்டிற்கு அருகே உள்ள காலனிக்கு செல்லும் பாதைக்கு தெற்கே சற்று தள்ளி ஒரு பள்ளி உள்ளது என்றால் சரிதான்.

11. எங்கள் ஊரில் கருப்பசாமி மகன் சங்கிலிமுருகன், முனியாண்டி மகன் முனியசாமி ஆகியோர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எனது தகப்பனார் வழியில் சொந்தம். முத்துக்கருப்பன் மற்றும் நாராயணன் எனது சித்தப்பாவின் பிள்ளைகள். பாலமுருகன் என்று எங்கள் ஊரில் யாரேனும் உள்ளார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. போலீசாரிடம் புகார் அளித்த பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

12. நான் கூறுகிறபடி நான் சொல்லிய இடத்தில் வீடு இல்லை என்றாலும், அந்த வீடு எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்டதல்ல என்றாலும், அது தெய்வச்சீலை என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அந்த தெய்வச்சீலையிடமிருந்து எதிரி உரிய சட்ட விதியின் படி கிரையம் பெற்றுள்ளார் என்றாலும், எனது தம்பி மேற்படி இடத்தை கிரையம் கேட்டு தெய்வச்சீலை கொடுக்கவில்லை என்பதால் தற்போது எதிரி மீது பொய் புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல. சொத்து எங்களுக்கு பாத்தியமானதாக இருந்திருந்தால் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்திருப்போம் என்றால் நாளது தேதிவரை அவ்வாறு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இராமநாதபுரம் ஆட்சியாளர் அலுவலகம் சென்றோம். ஆனால் எந்த பயனும் இல்லை. நான் கூறியபடி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

(ஒம்./-திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.